# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1965/6 - 2016 මැයි මස 03 වැනි අඟහරුවාදා - 2016.05.03

1965/6 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம் : 11/3/3/1/14L.
காணி அமைச்சின் குறிப்பு இலக்கம் : LD/05/2008/MV/408.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

இங்கு பகிரங்கத் தேவை என்பது மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கான காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவிலே லக்கல பல்லேசிய பத்துவவில், E 396 B அகரஹெடிய பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2015.12.05 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட பி.ஆ. வரைபட இலக்கம் 13 குறை நிரப்பி 94 பத்திர இலக்கம் 244 இல் காட்டப்பட்டுள்ள 8.4040 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு:

1. துண்டு இல. 9188

காணியின் பெயர்: நாகொல்ல, மக்குல்மட காடு; விபரம்: காடு; உரிமை கோருவோர்: ஹத்தொட்ட அமுன, லேல்ஒயவில் வதியும் ஏக்கநாயக்க முதியன்சேலாகே தயாரத்ன; விஸ்தீரணம்: 8.4040 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு, லக்கல பல்லேகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்ளையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

நிரோஷன கருணாதிலக்க,
பிரதேச செயலாளர்,
லக்கல - பல்லேகம.

பிரதேச செயலகம்,
லக்கல - பல்லேகம,
2016, ஏப்பிறல் 27.

5 - 476


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.